இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 16.05.2026

# எப்போதும் சரியும் அரசு!

**பெரும்பான்மையை நிரூபித்து விட்டதாக முதலமைச்சர் விஜய் மகிழ்ச்சி அடையக் கூடாது. எப்போதும் சரியும் அரசு தான் இது.**

தமிழ்நாடு சட்டமன்றம் என்பது 234 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டது. 118 உறுப்பினர்களைக் கொண்ட கட்சி தான் ஆளும் கட்சியாக அமர முடியும். த.வெ.க. 118 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெறவில்லை. 108 இடங்களைத் தான் வென்றது. அக்கட்சியின் தலைவர் ஒரு இடத்தில் போட்டியிட்டால் தோற்றுவிடுவோமோ என்று பயந்து இரண்டு இடங்களில் போட்டியிட்டார். இரண்டிலும் வென்றதன் அடிப்படையில் ஒன்றில் இருந்து தனது பதவியை விலக்கிக் கொண்டு விட்டார். இதனால் த.வெ.க.வின் பலம் 107 ஆனது.

திருப்பத்தூர் தொகுதியில் 1 வோட்டில் தான் த.வெ.க. வென்றது. இது தொடர்பாக தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் வழக்கு போட்ட நிலையில் திருப்பத்தூர் உறுப்பினரை வாக்களிக்கத் தடை செய்துள்ளது சென்னை உயர்நீதிமன்றம். எனவே த.வெ.க. எண்ணிக்கை 106 ஆனது. சபாநாயகர் நாற்காலியில் இருப்பவர் வாக்களிக்க முடியாது. எனவே, த.வெ.க.வின் பலம் சபையில் இப்போது 105 தான்.

118 இருக்க வேண்டிய சபையில் 105 தான் த.வெ.க.வின் பலம் ஆகும். இந்த நிலையில் காங்கிரஸ் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவை த.வெ.க. பெற்றுள்ளது. இவர்கள் தங்களது 13 உறுப்பினர்களை ஆட்சி அமைக்க ஆதரவு தந்தார்கள். இவர்கள் த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டவர்களா? இல்லை.

**தி.மு.க. கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்று சொல்லி வாக்குக் கேட்டவர்கள். இவர்களது உறுப்பினர்களை தனது ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க கடன் வாங்கி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். தனக்கு எதிரான கூட்டணியில் நின்று போட்டியிட்ட கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு பெரும்பான்மையை அடைந்து விட்டதாகச் சொல்லி ஆளுநருக்கு கடிதம் தந்தார் விஜய்.**

கூட்டணி ஆட்சியை அமைப்பதில், கூட்டணிகளின் தயவில் ஆட்சியை அமைப்பதில் தவறு இல்லை. அது தேர்தலுக்கு முந்தியே கூட்டணி அமைந்து, அதே கூட்டணி மக்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்று, பிறகு கூட்டணி ஆட்சியை அமைக்கலாம். ஆனால் எதிரெதிர் துருவங்களாக நின்று, மக்களைச் சந்தித்து, விமர்சனங்களை வைத்துவிட்டு, பின்னர் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில் – எதிர்த்து சண்டையிட்டவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆட்சி அமைப்பது மக்களது எண்ணத்துக்கு மாறானது ஆகும். இதனைத் தான் திருவாளர் விஜய் செய்திருக்கிறார்.

காங்கிரஸ் கட்சி நீங்கலாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகியவை தகுதியின் அடிப்படையில் – கொள்கையின் அடிப்படையில் – கோட்பாடுகளின் அடிப்படையில் – ஆளும் கட்சிக்கு ஆதரவைத் தரவில்லை. இன்னொரு தேர்தல் வந்துவிடக் கூடாது – குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது – என்று தான் காரணம் சொல்லி இருக்கிறார்கள். அதாவது வேறு வழியில்லாமல் ஆதரிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நல்லாட்சி தரும் என்பதற்காக அவர்கள் ஆதரிக்கவில்லை. இவர்களை வைத்துத் தான் பெரும்பான்மையை நிரூபித்துள்ளார் விஜய்.

**‘தி.மு.க. கூட்டணியில் இன்னும் தொடர்கிறோம்’ என்று தான் இக்கட்சிகள் சொல்லி இருக்கின்றன. கொள்கை ரீதியாக தி.மு.க. கூட்டணியில் தொடரும் கட்சிகளை, தனது ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க பயன்படுத்திக் கொண்டுள்ளார் முதலமைச்சர் விஜய். இதில் என்ன பெருமை இருக்கிறது?**

இதைவிடக் கொடுமை, ஊழல் சக்திகளாக அவரால் சொல்லப்பட்ட அ.தி.மு.க.வின் ஒரு அணியினர் தயவை நாடியது தான். இதனை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அவருக்கே உரிய பாணியில் கிண்டலாக அம்பலப்படுத்தி விட்டார். ‘புஷ்பா’ படத்தில் முதலில் ஷோபா போகும். பிறகு சி.எம்.போவார்’. இந்தக் கதை தான் இன்றைய விஜய் ஆட்சியின் காட்சி என்று விளக்கி விட்டார் எதிர்க்கட்சித் தலைவர்.

யாருடைய தயவில் தனது நாற்காலியைக் காப்பாற்றி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்? ஊழலில் ஊறிப்போன அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் தயவில்!

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சர்களாக இருந்த ஏழு பேர் மீது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இவர்கள் தயவோடுதான் தனது பெரும்பான்மையை நிரூபித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மீது ஏராளமான வழக்குகள் விசாரணையில் இருக்கிறது. சாலைகள் அமைப்பதில் முறைகேடுகள் நடைபெற்றதாக வழக்கு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு, எல்இடி வாங்கியதில் முறைகேடு நடைபெற்றதாக வழக்கு என லஞ்ச ஒழிப்புத்துறையால் பதிவு செய்யப்பட்டு உள்ளது. கே. பி.அன்பழகன், எம்.ஆர்.விஜயபாஸ்கர், காமராஜ், சி.விஜயபாஸ்கர், கே.சி.வீரமணி ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

“இந்த வழக்குகளில் குற்றம் செய்தவர்கள் பண மோசடி மற்றும் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்தது, ஊழல் குற்றத்தில் ஈடுபட்டதால் அவர்கள் மீது அமலாக்கத்துறை வழக்கு பதிவு செய்வதற்கான முகாந்திரம் உள்ளது” என்று தி.மு.க. எம்.பியான கிரிராஜன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கும் நிலுவையில் உள்ளது.

டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாகவும், கே.பி.அன்பழகன் வருமானத்துக்கு அதிகமாக 45.20 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாகவும், காமராஜ் மீது வருமானத்துக்கு அதிகமாக 58.44 கோடி சொத்து சேர்த்ததாகவும் வழக்கு பதிவாகி வெவ்வேறு நீதிமன்றங்களில் நடைபெற்று வருகிறது. இதெல்லாம் திருவாளர் விஜய்க்கு தெரியுமா? தெரியும். தெரிந்தே தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஊழல் சக்திகளின் உதவியை நாடி இருக்கிறார்.

**தன்னை தூயசக்தியாகச் சொல்லிக் கொள்ளும் முதலமைச்சர் விஜய், ஊழல் சக்திகளான இவர்கள் தயவில்தான் ஆட்சியை அமைத்துள்ளார். பெரும்பான்மையை இந்த லட்சணத்தில் தான் நிரூபித்துள்ளார் முதலமைச்சர் விஜய்.**

## 2026ஆம் ஆண்டிலும் வரலாறு வட்டமடிக்கிறது!

# பேரறிஞர் அண்ணாபோல் மீண்டு வருவார் மு.க.ஸ்டாலின்!

மே 4ஆம் நாள்
சந்திப்புக்குப் பிறகு
தளபதி
மு.க.ஸ்டாலின் அவர்களை
நேற்றுதான் பார்த்தேன்

‘இன்றைய
மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில்
உங்கள் பேச்சு
தப்பிப்பு (Escapism)இல்லாத
தலைமைப் பண்பைக்
காட்டியது’ என்றேன்

அவர்
முகத்திலும் உடல்மொழியிலும்
தோல்வியின் எந்தச் சாயலும்
இல்லை

இன்னும் பல்லாண்டுகள்
உழைப்பதற்கான
ஊட்டமும் ஊக்கமும்
இருப்பதாகவே தோற்றம் தருகிறார்

அவரது தோல்வியை
எதிரிகள்கூட ரசிக்கவில்லை

இரவு என்பது
இன்னொரு பகலைத்
தயாரிக்கிறது.
தோல்வி என்பது
இன்னொரு வெற்றியைத்
தயாரிக்கிறது

பேரறிஞர் அண்ணாவுக்கும்
தளபதி மு.க.ஸ்டாலினுக்கும்
வரலாறு ஓர் ஒற்றுமையை
வார்த்திருக்கிறது



1962 தேர்தலில்
50 சட்டமன்ற உறுப்பினர்களைத்
தி.மு.க வென்றெடுக்கிறது;
ஆனால்,
அண்ணா தோற்றுப்போகிறார்

தான்மட்டும்
சட்டமன்றம் செல்லாமல்
தம்பிமார்களை
அனுப்பிவைக்கிறார்

அப்போது
அண்ணா சொன்னது:

“ஐரோப்பாவில்
இஸ்லாமியர்க்கும் கிறித்துவர்க்கும்
போர் மூண்டது

ஏசு பிறந்த ஜெருசலம் நகரில்
கிறித்துவர்கள் நுழையக்கூடாது
என்று இஸ்லாமியர்கள்
தடைவிதித்தார்கள்
இஸ்லாமியர்களுக்குத்
தலைமை தாங்கியவன்
சாலடி என்னும் மன்னன்

கிறித்துவர்களுக்குத்
தலைமை தாங்கியவன் ரிச்சர்ட்

இறுதியில்
ஒரே ஒரு நிபந்தனையோடு
போர்நிறுத்த ஒப்பந்தம் எற்பட்டது:

‘எல்லாக் கிறித்துவர்களும்
ஜெருசலத்துக்குள் வரலாம்;
கிறித்துவர்களின் தலைவனான
ரிச்சர்ட் தவிர’”

அதைப் போலத்தான்
அண்ணா வெளியே நின்றார்;
தம்பிமார்கள்
சட்டமன்றம் சென்றார்கள்

2026ஆம் ஆண்டிலும்
வரலாறு வட்டமடிக்கிறது

தளபதி வெளியே நிற்கிறார்;
தளகர்த்தர்கள்
சட்டமன்றம் செல்கிறார்கள்

அண்ணா மீண்டு வந்தார்;
ஸ்டாலினும்.

கவிப்பேரரசு
**வைரமுத்து**

## மீனவர் பிரச்சினைக்கு விஜய் கடிதம் எழுதுவது வேடிக்கை!

# கண்டனம் தெரிவிக்காததால் மீனவர்கள் சங்கம் கடும் அதிருப்தி!

ராமேஸ்வரம், மே 16 -

தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய், சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கடந்த மார்ச் 4ம் தேதி தஞ்சாவூரில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது, “மீனவர்கள் பிரச்சினை குறித்து ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதுவதெல்லாம் வேலைக்கு ஆகாது. மீனவர்களின் பாதிப்பை உண்மையாக, உணர்வாக ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். நம்ம மீனவர்கள் மீது அவர்கள் கையே வைக்கவிடக் கூடாது. அவர்களுக்கான பாதுகாப்பு பக்காவாக இருக்கணும். அதுதான் நமது ஒரே அஜெண்டா. மீனவர்களே, அடுத்தது நமது ஆட்சி தான். கவலைப்படாதீர்கள். உங்களுக்கான பாதுகாப்பு பக்காவாக இருக்கும்” என ஆவேசமாக பேசினார்.

தற்போது தேர்தலில் வெற்றி பெற்று தமிழக முதல்வராக த.வெ.க. தலைவர் ஜோசப் விஜய் பொறுப்பேற்றுள்ளார்.

இந்நிலையில் ராமேஸ்வரம் அருகே மண்டபத்தில் இருந்து நாட்டுப்படகில் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற கன்னியாகுமரி மீனவர்கள் 6 பேரையும், ஒரு படகையும் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். இதையடுத்து மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதல்வர் ஜோசப் விஜய், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது மீனவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

### சொல்வது ஒன்று செய்வது ஒன்று!

இதுகுறித்து ராமேஸ்வரம் ஞானசீலன் விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் காரல் மார்க்ஸ் கூறுகையில், “த.வெ.க. தலைவர் ஜோசப் விஜய் முதல்வராக பதவி ஏற்றப் பிறகு மீனவர்கள் பிரச்சினை உணர்வுப்பூர்வமாக பார்க்கப்படும். ஒரு புதிய மாற்றம் உருவாகும் என பெரும் எதிர்பார்ப்பில் இருந்தோம்.

ஆனால் பிரசாரத்தில் பேசியதற்கு மாறாக, விஜய் கடிதம் எழுதியது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

அப்படியென்றால் பிரசாரத்தில் பேசியது எல்லாம் வெறும் கவர்ச்சிக்காக பேசியதா? மீனவர் நலன் காக்க சிறப்பாக செயல்படுவேன் என உறுதியளித்த முதல்வர் ஜோசப் விஜய், தற்போது மீனவர்கள் கைதுக்கு ஒரு கண்டனம் கூட தெரிவிக்காதது ஏன்?

முதல்வர் விஜய் சினிமாவில் பேசுவதுபோல், பிரமாண்டமான வசனங்கள் பேசிவிட்டு ஆட்சிக்கு வந்த பிறகு சொல் ஒன்று செயல் ஒன்றாக செயல்படுவது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. மீனவர்கள் பிரச்சினைக்கு முதல்வர் விஜய் உணர்வுப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சினிமா இயக்குனர்களால் இயக்கப்படும் நடிகர் விஜய் போன்று இல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக முதல்வராக மீனவர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

